TRAVEL WITH ATM

# ALL TIME MEDIA

WEEKLY E-PAPER - E3

30.8.2026 SUNDAY



உள்ளே:

மலேசிய கலைஞர்களின் குரலாக ஒலிக்கும் ஒரு பயணம்

புத்ராஜெயா சுதந்திர தின கொண்டாட்டத்தில் துன் மகாதீர் பங்கேற்றார்






# உலக அரங்கில் மலேசிய தமிழச்சி மிஸ் வேர்ல்ட் 2026யில் தனுசியா

## மலேசியாவில் கௌதம் வாசுதேவ் மேனனின் ‘ஒன்றா இரண்டா’


MYEVENTS INTERNATIONAL
DELIVERING EXCELLENCE


**ஒரு தலைமுறையின் காதலைப் பேசினால் சில திரைப்படங்கள் நினைவுக்கு வரும். சில காட்சிகள் மனதில் நிற்கும். சில பாடல்கள் காலம் கடந்தும் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும். அந்த நினைவுகளின் பின்னால் இருக்கும் ஒரு முக்கியமான பெயர் கௌதம் வாசுதேவ் மேனன்.**

தமிழ் சினிமாவில் தனக்கென தனித்துவமான கதைசொல்லல் பாணியையும், காதல் மற்றும் உறவுகளை அழகிய திரைமொழியில் பதிவு செய்யும் தனிச்சிறப்பையும் உருவாக்கிய GVM-25 ஆண்டுகால திரைப்பயணம், இம்முறை மலேசியாவில் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்த மாபெரும் கலை மற்றும் இசை விழா எதிர்வரும் அக்டோபர் 10ஆம் தேதி, சனிக்கிழமை, கோலாலம்பூரில் உள்ள The Arch Galeries-ல் நடைபெறவுள்ளது.

பக்கம்: 3

## 1 லட்சம் மலேசிய இளைஞர்களுக்கு ஏஐ திறன்: புதிய வேலைவாய்ப்புச் சவால்களை எதிர்கொள்ளும் திட்டம்



மாறிவரும் வேலைவாய்ப்புச் சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப மலேசிய இளைஞர்களைத் தயார்படுத்தும் நோக்கில், 1 லட்சம் பேருக்கு செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான திறன்களை வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக மனிதவள அமைச்சர் டத்தோ ஸ்ரீ ரமணான் தெரிவித்தார்.

பக்கம்: 3





## சுபாங் பயணிகளுக்கு மெர்டேகா சிறப்பு சலுகைகள்: பாதிக் ஏர்-யின் 30 விழுக்காடு வரை தள்ளுபடி

**மெர்டேகா காலத்தை முன்னிட்டு, சுபாங் சுல்தான் அப்துல் அஸிஸ் ஷா விமான நிலையம் வழியாகப் பயணம் செய்யும் பயணிகளுக்கு க்ஷயவமை ஹைச மற்றும் விமான நிலையத்தில் செயல்படும் சில வர்த்தக நிறுவனங்கள் இணைந்து சிறப்பு சலுகைகளை வழங்குகின்றன.**

குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வழங்கப்படும் இந்தச் சலுகையில், Batik Air-ன் Value Fare டிக்கெட்டுகளுக்கு 15% தள்ளுபடியும், குடநஓை குயசந டிக்கெட்டுகளுக்கு 30% தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

பக்கம்: 3






## கூலாயில் ‘இரும்புத் தோட்டம்’ திரைப்பட சிறப்புக் காட்சி





**தேசிய மாதக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, கூலாய் நாடாளுமன்ற உறுப்பினர் தியோ நீ சிங் முயற்சியில் மலேசியத் தமிழ் திரைப்படமான ‘இரும்புத் தோட்டம்’ சிறப்புக் காட்சி கூலாய் வாழ் மக்களுக்காக இலவசமாகத் திரையிடப்பட்டது.**

மலேசியத் தமிழ் திரைப்படத் துறை கலைஞர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டதாக தியோ குறிப்பிட்டார்.

“இந்தத் திரைப்படக் குழுவின் படைப்பால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். மலேசியத் திரையுலகம் அனைத்துலகத் திரைப்படங்களுக்கு நிகரான தரமான படைப்புகளை உருவாக்கும் திறன் கொண்டது என்பதை இந்தத் திரைப்படம் நிரூபித்துள்ளது.” என்றார். தொடர்பு துணையமைச்சருமான தியோ, உள்ளூர் திரைப்படங்களுக்கு நாம் ஆதரவளிக்கும்போது, ஒரு திரைப்படத்தை மட்டும் ரசிப்பதில்லை, நமது கலைஞர்களின் திறமை, முயற்சி மற்றும் கனவுகளுக்கும் ஆதரவளிக்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக, கூலாய் ஈயோன் பேரங்காடியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திரைப்படத்தின் முன்னணி கலைஞர்களான இர்ஃபான் ஸைனி, கே.எஸ். மணியம், ஆர். மோகன ராஜ், தினி சுந்தர் மற்றும் தயாரிப்பாளர் ஜெகன் ஜோன் பீட்டர் ஆகியோர் கூலாய் மக்களுடன் இணைந்து திரைப்படத்தைக் கண்டுகளித்ததுடன், ரசிகர்களுடன் கலந்துரையாடியும் மகிழ்ந்தனர்.

பக்கம்: 3




# மலேசிய கலைஞர்களின் குரலாக ஒலிக்கும் ஒரு பயணம்







**மலேசியத் தமிழ் சமூகத்தின் கலை, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையில் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கியுள்ள பெயர்களில் மண்ணின் மைந்தன் மலேசியா (Mannin Maindhan Malaysia) முக்கியமான ஒன்று. அந்தப் பயணத்தின் பின்னணியில் தொடர்ந்து செயல்பட்டு வரும் குமார், மலேசியத் கலைஞர்களின் திறமைகளையும் படைப்புகளையும் வெளிக்கொண்டு வருவதில் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறார்.**

இன்றைய டிஜிட்டல் உலகில் ஒரு ஊடகத் தளம் என்பது வெறும் செய்திகளை பகிரும் இடமாக மட்டும் இல்லாமல், திறமைகளை அறிமுகப்படுத்தும் பாலமாகவும் மாறியுள்ளது. அந்த வகையில் Mannin Maindhan Malaysia, மலேசியத் தமிழ் கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் பொழுதுபோக்கு துறையினருக்கு ஒரு முக்கியமான தளமாக உருவெடுத்துள்ளது. கடந்த காலங்களில் குறும்படங்கள் உள்ளிட்ட தமிழ் கலைப் படைப்புகளுக்கு ஆதரவு வழங்கிய நிகழ்வுகளும் இதன் செயல்பாடுகளில் இடம்பெற்றுள்ளன.

## திறமைகளுக்கு ஒரு மேடை

திரைப்படம், குறும்படம், இசை, கலை மற்றும் ஊடகத் துறையில் மலேசியத் தமிழர்களின் திறமைகள் பல நேரங்களில் பெரிய அளவில் வெளிச்சத்திற்கு வராமல் போகின்றன.

அத்தகைய திறமைகளுக்கு ஒரு வாய்ப்பையும், அவர்களின் முயற்சிகளுக்கு ஒரு பார்வையாளர்களையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் Mannin Maindhan Malaysia தொடர்ந்து பயணித்து வருகிறது.

இந்தப் பயணத்தில் குமார் போன்ற ஊடக ஆர்வலர்களின் பங்களிப்பு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

ஒரு ஊடகத் தளத்தை உருவாக்குவது எளிதான விஷயம் அல்ல. தொடர்ந்து உள்ளடக்கங்களை உருவாக்குதல், கலைஞர்களுடன் இணைந்து செயல்படுதல், புதிய திறமைகளை அடையாளம் காணுதல் என பல்வேறு பணிகளுக்கு அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது.

அந்த வகையில், குமார் அவர்களின் பயணம் ஒரு தனிநபரின் பயணமாக மட்டுமல்லாமல், மலேசியத் தமிழ் கலை மற்றும் ஊடக உலகின் வளர்ச்சியோடும் இணைந்த பயணமாக பார்க்கப்படுகிறது.



## இளம் தலைமுறைக்கு ஊக்கம்

இன்றைய இளம் தலைமுறை சமூக ஊடகங்களின் மூலம் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகிறது. ஆனால் அந்தத் திறமைகளை சரியான தளத்திற்கு கொண்டு செல்வது மிகவும் அவசியம்.

இளம் கலைஞர்கள், குறும்பட இயக்குநர்கள், நடிகர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் உள்ளடக்கப் படைப்பாளிகளுக்கு ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்குவது போன்ற பணிகள், மலேசியத் தமிழ் கலைத்துறையின் அடுத்த தலைமுறையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## மண்ணோடு இணைந்த ஊடகப் பயணம்

'மண்ணின் மைந்தன்' என்ற பெயரே மண்ணையும் மக்களையும் பிரதிபலிக்கிறது.

மலேசியத் கலைஞர்களின் வாழ்க்கை, திறமை, கலை மற்றும் சாதனைகளை வெளிப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து பயணிப்பது இந்தப் பெயருக்கு மேலும் அர்த்தம் சேர்க்கிறது.

குமார் அவர்களின் பயணம் இன்னும் பல புதிய முயற்சிகளுக்கும், புதிய தலைமுறை கலைஞர்களுக்குமான வாய்ப்புகளுக்கும் வழிவகுக்கட்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பு.

மலேசியத் தமிழ் ஊடகப் பயணத்தில் ஒரு பெயராக மட்டுமல்லாமல், திறமைகளுக்கான ஒரு மேடையாகவும் தொடர்ந்து பயணிக்கும் "மண்ணின் மைந்தன் மலேசியா" மேலும் பல ஆண்டுகள் சிறக்க வாழ்த்துகள்.

**முதல் பக்கம் தொடர்ச்சி**

## மலேசியாவில் கௌதம்....

நிகழ்ச்சி தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு, நிகழ்வின் அதிகாரப்பூர்வ ஆதரவாளரான Berjaya Times Square Hotel-ல் நடைபெற்ற சிறப்பு செய்தியாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டது.

இதில் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன், Radaan Mediaworks குழுமத் தலைவர் மற்றும் நடிகை ராதிகா, நிகழ்ச்சி இயக்குநர் அன்பா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

**'ஒன்றா ரெண்டா'வை வெறும் இசை நிகழ்ச்சியாக எதிர்பார்க்க வேண்டாம்.**

இது GVM-ன் சினிமா உலகத்திற்குள் ரசிகர்களை அழைத்துச் செல்லும் ஒரு நேரடி, நெருக்கமான மற்றும் அனுபவமிக்க நிகழ்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

திரைப்படத் தயாரிப்பு, திரைக்கதை, கதைசொல்லல், இந்திய சினிமா மற்றும் பொழுதுபோக்குத் துறை குறித்த தனது அனுபவங்களையும் பார்வைகளையும் ழுஏஆ நேரடியாக ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்ள உள்ளார்.

அவரது திரைப்படங்களில் இடம்பெற்ற முக்கியமான கதாபாத்திரங்கள், காட்சிகள், இசைத் தருணங்கள் மற்றும் அவற்றின் பின்னணிக் கதைகளும் ரசிகர்களுக்கு மீண்டும் நினைவூட்டப்படவுள்ளன.

அந்த இசை உலகை நேரடியாகக் கொண்டாடும் வகையில், முன்னணி கலைஞர்கள் பலர் ஒரே மேடையில் இணையவுள்ளனர்.

கார்த்திக், ஸ்ருதி ஹாசன், சத்ய பிரகாஷ், சைந்தவி, பால் டப்பா, பிளேஸ், ஹரி பிரியா மற்றும் கிருஷ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

இவர்களுடன் இணையும் சக்திவாய்ந்த நேரடி இசைக்குழு, GVM-ன் சினிமா இசை அனுபவத்தை ரசிகர்களுக்கு இன்னும் பிரம்மாண்டமாக வழங்கவுள்ளது.

இந்த மாபெரும் நிகழ்ச்சியில் சுமார் 5,000 பார்வையாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசிய தமிழ் சமூகத்தினர், இந்திய சினிமா ரசிகர்கள், இளைஞர்கள், குடும்பங்கள், இளம் தொழில்முனைவோர் மற்றும் கார்ப்பரேட் விருந்தினர்கள் என பல்வேறு தரப்பினரும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

மேலும், சிங்கப்பூர் மற்றும் பிராந்திய நாடுகளில் இருந்து ழுஏஆ ரசிகர்களும் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசியாவில் இந்திய சினிமா மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த உயர்தர நிகழ்வுகளை தொடர்ந்து உருவாக்கும் நோக்கில் My Events International மற்றும் Radaan Mediaworks ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த நிகழ்ச்சியை முன்னெடுக்கின்றன.

மலேசியாவில் இந்திய சினிமா மற்றும் பொழுதுபோக்கிற்கான புதிய தரத்தை உருவாக்கும் முயற்சியாக இந்த நிகழ்வு அமையும் என My Events International நிறுவனத்தின் நிர்வாகி டைலன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த கூட்டணி எதிர்காலத்தில் மலேசியாவில் பல்வேறு உயர்தர இந்திய சினிமா மற்றும் பொழுதுபோக்கு முயற்சிகளை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## 1 லட்சம் மலேசியர்களுக்கு...

'AI for the People' எனப்படும் இந்தத் திட்டத்தின் மூலம், எதிர்கால வேலைவாய்ப்புச் சந்தையில் இளைஞர்கள் போட்டித்தன்மையுடன் செயல்படத் தேவையான புதிய திறன்களைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என அவர் கூறினார்.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் நலனை மேம்படுத்தும் வகையில், செப்டம்பர் 1 முதல் அமலுக்கு வரும் பல்வேறு புதிய முயற்சிகளை பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதுடன், திறன் மேம்பாடு மற்றும் கூடுதல் வருமான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் பொருளாதார வளர்ச்சியின் பயனைப் பெறுவதை உறுதி செய்வது அவசியம் என்றும் ரமணான் வலியுறுத்தினார்.

## பாத்திக் ஏர்....

இதனுடன், பங்கேற்கும் Starbucks, Burger King, Famous Amos, JETSETGO மற்றும் Sky Lounge உள்ளிட்ட விற்பனை நிலையங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு சலுகைகளைப் பயணிகள் பெறலாம்.

பயணிகளின் அனுபவத்தை மேலும் சிறப்பிப்பதுடன், சுபாங் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள உள்ளூர் வர்த்தக நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதும் இந்தப் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

Batik Air தலைமை நிர்வாக அதிகாரி சந்திரன் ராமா முத்தி கூறுகையில், சுபாங் விமான நிலையம் விமானப் பயணத்தை மக்களுக்கு மேலும் எளிதாகவும் வசதியாகவும் மாற்றுவதில் முக்கிய பங்கு வகிப்பதாகத் தெரிவித்தார்.

கிள்ளான் பள்ளத்தாக்கு மக்களுக்கு சுபாங் விமான நிலையம் அதன் அமைவிடம் மற்றும் எளிதான அணுகல் காரணமாக தொடர்ந்து கவர்ச்சிகரமான தேர்வாக உள்ளது. குறிப்பாக குறுகிய தூர உள்நாட்டு மற்றும் பிராந்தியப் பயணங்களில், விலையைப் போலவே பயண வசதியும் முக்கியத்துவம் பெறுகிறது.

"எங்களின் வர்த்தகக் கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், இந்தப் பிரசாரம் பயணிகளுக்கு கூடுதல் மதிப்பை வழங்குவதுடன், சுபாங் சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கிறது," என்று அவர் கூறினார்.

சுபாங் விமான நிலையத்தில் கூஷயவமை ஹைச தனது சேவைகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது. தற்போது ஜொகூர் பாரு, கோத்தா பாரு, கோத்தா கினபாலு, கூச்சிங், லங்காவி, பினாங்கு, சிங்கப்பூர், பாங்காக் மற்றும் ஜகார்த்தா உள்ளிட்ட இடங்களுக்கு விமான சேவைகள் இயக்கப்படுகின்றன.

இதன் மூலம் வேலை, குடும்பச் சந்திப்பு அல்லது குறுகிய விடுமுறை என பல்வேறு தேவைகளுக்காகப் பயணிக்கும் மக்களுக்கு உள்நாட்டு மற்றும் பிராந்தியப் பயணங்களுக்கான கூடுதல் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

தற்போது சுபாங் விமான நிலையத்திலிருந்து வாரத்திற்கு 144-க்கும் மேற்பட்ட விமானங்களை கூஷயவமை ஹைச இயக்கி வருகிறது. விமான வலையமைப்பு தொடர்ந்து விரிவடையும் நிலையில், மேலும் புதிய இடங்கள் சேவையில் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இரும்புத் தோட்டம்....

துணையமைச்சர் முன்னெடுத்த இந்த முயற்சிக்கு திரைப்படக் கலைஞர்களும், தயாரிப்புக் குழுவினரும் வரவேற்பு தெரிவித்தனர். உள்ளூர் படைப்புகளுக்கு மக்களிடம் நேரடியாகச் சென்று சேரும் வாய்ப்பை ஏற்படுத்தியதுடன், மலேசியத் திரைப்படக் கலைஞர்களின் திறமைகளை பரந்த அளவில் மக்களிடம் கொண்டு சேர்க்க இந்த முயற்சி உதவுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

'இரும்புத் தோட்டம்' மலேசியாவில் உருவாக்கப்பட்ட தமிழ் குற்றப் புலனாய்வு திரைப்படமாகும். கடந்த ஆகஸ்ட் 6ஆம் தேதி வெளியீடு கண்ட இத்திரைப்படம், மலேசிய தேசியத் திரைப்பட மேம்பாட்டுக் கழகமான (ஃபினாஸ்) வழங்கும் முதல் முறையாகத் திரைப்படம் உருவாக்கும் புதிய படைப்பாளிகளுக்கான நிதியுதவியும் பெற்றுள்ளது.

தேசிய தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெற்ற இச்சிறப்புக் காட்சியில் திரைப்படத்தைக் காண வந்த மக்களுக்கு தேசியக் கொடிகளும் வழங்கப்பட்டன. மேலும், செனாய் சட்டமன்ற உறுப்பினர் வோங் போர் யாங் மற்றும் ஸ்கூடாய் சட்டமன்ற உறுப்பினர் ஜே. கார்த்தியாயினி ஆகியோரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

## புத்ராஜெயா சுதந்திர தின கொண்டாட்டத்தில் துன் மகாதீர் பங்கேற்றார்



முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமது இன்று டத்தாரான் புத்ராஜெயாவில் நடைபெற்ற 2026 தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்.

@உாநனநவடிககைஉையைட என்ற டிக்டாக் கணக்கில் நேரலையாக ஒளிபரப்பப்பட்ட காணொளியில், 101 வயதான அந்த அரசியல்வாதி, மின்சார சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி பார்வையாளர்களைப் பார்த்து கையசைப்பது காணப்பட்டது.

### துன் மகாதீர் பார்வையாளர்களை வாழ்த்தினார்.

அதே நேரத்தில் சில பாதுகாப்புப் பணியாளர்களும் பார்வையாளர்களும் அவருடன் செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.

மேலும், அவர் தனது முதல் பதவிக்காலத்தில் 1981 முதல் 2003 வரையிலும், இரண்டாவது பதவிக்காலத்தில் 2018 முதல் 2020 வரையிலும் மலேசியாவின் பிரதமராக இருந்த தனது காலத்தை எடுத்துரைக்கும் ஒரு காணொளியுடன், முகநூலில் ஒரு சுருக்கமான தேசிய தினச் செய்தியையும் பதிவிட்டார்.

மலேசியாவின் சுதந்திர தின, 69ஆவது தேசிய தின வாழ்த்துக்கள் என்று அவர் கூறினார்.